

கோவை ஆற்றுப்பாலம் அருகில் புனரமைக்கப்பட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலையை பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். இதில் மாவட்டச் செயலாளர்கள் நா.கார்த்திக் (கோவை மாநகர்), தொண்டாமுத்தூர் அ.ரவி (வடக்கு), தளபதி முருகேசன் (தெற்கு) தி.க. பொதுச் செயலாளர் வீ.அன்பு ராஜ், த.பெ.தி.க.பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன், கழக மாணவர் அணிச் செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், தி.க.சந்திரசேகர், கழக நிர்வாகிகள் குறிச்சி பிரபாகரன், குறிச்சி கார்த்திகேயன், மாநகராட்சி தெற்கு மண்டலத் தலைவர் தனலட்சுமி உள்பட கழக நிர்வாகிகள், திராவிடர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அறந்தாங்கியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகம் சார்பில் அறந்தாங்கி நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் ஏற்பாட்டில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், இயற்கை வளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையில் அறந்தாங்கி பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாகச் சென்று பேரறிஞர் அண்ணா திருவுருவப் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துப்பட்டது. இந்நிகழ்வுகளில் அறந்தாங்கி தொகுதி பார்வையாளர் சுப.த.திவாகரன், உதயம் சண்முகம், ஞான.இளங்கோவன், இரா.ஆனந்த், த.மணிராஜன், தி.முத்து, நசுருதீன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




பேரறிஞர் அண்ணா அவர்களின் 117–வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் சு.முத்துசாமி அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி, உறுதிமொழி ஏற்றனர். நிகழ்வில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, கே.இ.பிரகாஷ் எம்.பி., வி.சி.சந்திரகுமார் எம்.எல்.ஏ., எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், குறிஞ்சி என்.சிவகுமார், வீரமணி மா.சு.ராதாகிருஷ்ணன், குமார் கே.முருகேஷ், ஆ.செந்தில்குமார், செல்லபொன்னி, க.சின்னையன், ப.க.பழனிச்சாமி, மீனா ஜெயக்குமார், வி.சி.நடராஜன், ஜெ.திருவாசகம், திலகவதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 147–வது பிறந்தநாளை முன்னிட்டு முத்தூரில் அவரின் திருவுருவப்படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி, உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். இதில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி., க.ஈஸ்வரசாமி எம்.பி. உள்பட ஒன்றிய, நகர, பேரூர்க் செயலாளர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




சேலம் கிழக்கு மாவட்டம், ஆத்தூர் கிழக்கு ஒன்றியம், அப்பம்ம சமுத்திரம் ஊராட்சியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117–வது பிறந்த நாளை முன்னிட்டு அண்ணா திருவுருவப் படத்திற்கு ஒன்றியச் செயலாளர் டாக்டர் வே.செழியன் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தி, இனிப்புகள் வழங்கி "தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்" என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்டக் கவுன்சிலர் நல்லம்மாள், முன்னாள் நகர துணைச் செயலாளர் பத்திரம் மனோகரன், சக்கரவர்த்தி, ராஜ்குமார், தென்னவன், தினேஷ், முருகன், சுரேந்தர், ராமதாஸ், மோகன், பிரபு, சேட்டு, கருணாநிதி, ஐடிவிங் அசோக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தந்தை பெரியார் அவர்களின் 147ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (17.9.2025) கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு, மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் வெ.கவிதா, மாவட்ட ஆட்சித் தலைவர் மீ.தங்கவேல் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தந்தை பெரியார் 147வது பிறந்தநாளை முன்னிட்டு

# கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சமூக நீதிநாள் உறுதிமொழி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் ஏற்றனர்!

கரூர், செப். 19 –

தந்தை பெரியார் அவர்களின் 147ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சமூக நீதி நாள் உறுதி மொழி ஏற்றுக்கொண்டனர்.

தந்தை பெரியார் அவர்களின் 147ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.9.2025) கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை சமூக நீதி தினமாக அறிவித்ததைத் தொடர்ந்து, தந்தை பெரியார் அவர்களின் சமூக நீதிப் பணிகளை நினைவு கூறும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் இன்றைய தினம் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தந்தை பெரியாரின் 147 வது பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற அன்பு நெறியையும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பண்பு நெறியையும் எனது வாழ்வியல் வழிமுறைகளாகக் கடைப்பிடிப்பேன்!

சுயமரியாதை ஆளுமைத் திறனும்பகுத்தறிவுப் பார்வையும் கொண்டவையாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்!

சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை ஒப்படைத்துக் கொள்வேன்!

மானுடத்தின் மீது பற்றையும் மனிதாபிமானத்தையும் என்றும் போற்றுவேன். சமூக நீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைத்திட இந்த நாளில் உறுதியேற்கிறேன்!

எனும் சமூக நீதி உறுதிமொழியை அரசு அலுவலர்கள், பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், ஆர்.இளங்கோ, திருமதி க.சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் திருமதி. வெ.கவிதா, மாவட்ட ஆட்சித் தலைவர் மீ.தங்கவேல், மாவட்ட வருவாய் அலுவலர்கள் ம.கண்ணன், கு. விமல் ராஜ் (நிலமெடுப்பு), திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வீ.ரெ. வீரபத்திரன், மாநகராட்சி ஆணையர் திருமதி கே.எம். சுதா, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் திருமதி. ஆர்.அபிராமி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இன்றைய அரசியலை இளைய தலைமுறையினர் தெரிந்து கொள்ளும் வகையில்

# 11 மாணவ - மாணவிகளுக்கு ஒரு மாத கால இன்டர்ன்ஷிப் பயிற்சி!

## கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் பங்கேற்பு!

கோவை, செப். 19 –

இன்றைய அரசியலை இளைய தலைமுறையினர் தெரிந்து கொள்ளும் வகையில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் உடன் 11 மாணவ மாணவிகளுக்கு ஒரு மாதம் கால இன்டர்ன்ஷிப் பயிற்சி வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் இருந்து 11 மாணவ, மாணவியர் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் உடன் ஒரு மாத காலம் உடன் இருந்து நாடாளுமன்ற உறுப்பினரின் பணிகள் குறித்தும், அவர் மக்களுக்கு ஆற்றி வரும் பணிகள் குறித்தும் தெரிந்து கொள்ள உள்ளனர்.

முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கூறியதாவது : நாடாளுமன்ற உறுப்பினர் என்ன செய்கிறார்?, அவருடைய பணி என்ன?, நாடாளுமன்ற உறுப்பினர் நிதி எவ்வாறு மக்களுக்கு பயன்படுத்தப்படுகின்றது? என்பது குறித்து, பல்வேறு கல்லூரிகளில் இருந்து தனியார் அமைப்பால் தேர்வு செய்யப்பட்ட 11 மாணவ, மாணவியர்கள் என்னுடன் இருப்பார்கள். பாராளுமன்ற உறுப்பினர் என்றால் என்ன? என்ற புரிதல் சில மாணவர்களுக்கு இல்லை. அதற்காக இளைய தலைமுறை புரிந்து கொள்வதற்காக மாணவர்கள் என்னுடன் பயணம் மேற்கொள்கின்றனர்.

அவர்களுக்கு ஓட்டு முக்கியத்துவம் மற்றும், மாணவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் என்ன கற்றுகொண்டார்கள் என கட்டுரை எழுத உள்ளார்கள். மேலும் தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் இந்தியாவின் நம்பர் 1 முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் "நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக தேர்தல் வாக்குறுதியில் சொல்லாத வாக்குறுதிகளையும் சேர்த்து பல்வேறு எண்ணற்ற திட்டங்களை அறிவித்து உலக நாடுகளே பின்பற்றும் வகையில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம் இந்தியாவே வியக்கும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.9.2025 திங்கட்கிழமை அன்று சென்னை, கலைவாணர் அரங்கில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், "அன்புக்கரங்கள் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள், இத் திட்டதின் மூலம் பெற்றோர் இல்லாத குழந்தைகளுக்கு மாதம் 2,000 ரூபாய் வழங்கப்படும் இதை மாணவர்களிடம் எடுத்து கூறினேன்.

மேலும் ஒரு மாத கால பயிற்சிக்கு பிறகு டெல்லியில் குளிர்கால கூட்டத்தொடர் நடைபெறும் பொழுது ஒரு நாள் கூட்டத்தில் 11 மாணவ, மாணவியர்கள் நேரில் சென்று பார்வையிட்ட உள்ளார்கள். இன்று முதல் கட்டமாக 11 மாணவ, மாணவியர்களுக்கும், அடுத்த கட்டமாக அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் இருந்து பல்வேறு மாணவ, மாணவிர்களுக்கும் இது போன்ற வாய்ப்புகள் அளிக்கப்படும் என தெரிவித்தார்.

இன்டன்சிப் மாணவி புவனிகா கூறுகையில் : கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் அவர்களுடன் (30 நாட்கள்) ஒரு மாத காலத்திற்கு உடன் இருந்து அவர் பொது மக்களுக்கு ஆற்றி வரும் பணிகள் மற்றும் அரசின் திட்டங்கள் மக்களுக்கு எவ்வாறு சென்றடைக்கின்றது என்றும், இப்பொழுது இருக்கின்ற இளைய தலைமுறையினருக்கு இதெல்லாம் தெரியவில்லை. நாங்க அதை பார்த்து கற்றுக்கொள்ள போகிறோம், இன்றைய காலகட்டத்தில் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பது மிகப்பெரிய விசயமா இருக்கிறது. நாங்கள் இதை ஒரு வாய்ப்பு என்று கருதவில்லை, ஒரு வரமாக கருதுகிறோம் என்று கூறினார்.

மாணவி சுதிலயா சுரேஷ் கூறுகையில் : நான் இதில் ஆர்வமுடன் கலந்து கொள்ள வந்துள்ளேன். உண்மையான அரசியல் எப்படி இருக்கும், ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி என்று பார்க்காமல், அரசியல் எப்படி இருக்கும்? பாலிசி மேக்கிங் எப்படி இருக்கும் ? நிஜமான வாழ்க்கையில் அரசியல் எப்படி இருக்கும் என்பதை கற்றுக்கொள்ள வந்துள்ளோம், முதல் நாளைய தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு நிகழ்ச்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினருடன் வந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ. கிருஷ்ணமூர்த்தி
### செப்டம்பர் 19 (2024)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

தியாகராயர் நகர் பகுதியில் கலைஞர் மற்றும் தளபதி மு.க.ஸ்டாலின் ஆகிய பொதுப் பணி மன்ற தலைவராகவும் – 122வது வட்ட பகுதி பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.